வினா

கீழ்க்காணும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு 100 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை/ கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




| | |
|---|---|
| வெந்நீர் | அவசரமாக |
| பாத்திரத்தில் | தள்ளிவிட்டாள் |
| தொலைபேசி | கூச்சல் |
| கவனக்குறைவாக | விரைந்தோடி |

**Q1 முதல் Q23 வரையுள்ள வினாக்களுக்கு OAS விடைத்தாளில் சரியான விடையின் எண்ணுள்ள (1, 2, 3 அல்லது 4) நீள்வட்டத்தை நிழலிடு.**

## *"அ" பிரிவு*

### *A1 வேற்றுமை*

***Q1** முதல் **Q6** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.*
***(6 X 2 = 12 மதிப்பெண்கள்)***

குளக்கரையில் இருந்த மரத்தில் குரங்கு ஒன்று அமர்ந்திருந்தது. அப்பொழுது இரண்டு மீனவர்கள் ____(Q1)____ இறங்கினார்கள். அவர்கள் வலைவீசி ____(Q2)____ பிடித்தார்கள். அவர்கள் செய்வதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்தது அந்தக் குரங்கு. மீன்பிடித்து முடித்த ____(Q3)____ வலையைக் குளக்கரையில் காய வைத்தார்கள். பிறகு, மீன்களை எடுத்துக்கொண்டு ____(Q4)____ புறப்பட்டார்கள்.

மரத்திலிருந்து கீழே இறங்கிய குரங்கு தானும் வலைவீசி மீன்களைப் பிடிக்க நினைத்தது. அந்த வலையை எடுத்துக்கொண்டு குளத்தில் இறங்கியது. மீனவர்கள் வீசியது போல வலையை வீசியது. வீசத் தெரியாமல் வலையை வீசியதால் ____(Q5)____ தலையும் கால்களும் வலையில் சிக்கிக்கொண்டன. வலையிலிருந்து விடுபட முயற்சி செய்தது அது. ஆனால், குரங்கினால் முடியவில்லை. அது ____(Q6)____ குளத்து நீருக்குள் மூழ்கத்தொடங்கியது. "குரங்காகப் பிறந்த நான் மனிதனைப் போல ஏன் நடித்தேன்? அதனால்தான் சாகிறேன்"! என்று வருந்தியபடி உயிரை விட்டது அது.

Q1
(1) குளத்தில்
(2) குளத்தின்
(3) குளத்தை
(4) குளத்திற்கு

( )

Q2
(1) மீன்களுக்கு
(2) மீன்களில்
(3) மீன்களை
(4) மீன்களோடு

( )

Q3 (1) அவர்கள் ( )
(2) அவர்களில்
(3) அவர்களால்
(4) அவர்களுடன்

Q4 (1) கரைக்கு ( )
(2) கரையோடு
(3) கரையிலிருந்து
(4) கரையினது

Q5 (1) குரங்கின் ( )
(2) குரங்கில்
(3) குரங்குக்கு
(4) குரங்கிலிருந்து

Q6 (1) வலையை ( )
(2) வலையினது
(3) வலையால்
(4) வலையோடு

*A2 செய்யுள் / பழமொழி*

**Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (6 X 2 = 12 மதிப்பெண்கள்)**

Q7 எரிகிற விளக்கானாலும் ________________ வேண்டும்.

(1) வரைகோல்
(2) அளவுகோல்
(3) எழுதுகோல்
(4) தூண்டுகோல்

( )

Q8 ________________ அழகு கசடற மொழிதல்.

(1) அறிஞருக்கு
(2) கற்றோருக்கு
(3) கல்விக்கு
(4) அறிவுக்கு

( )

Q9 செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செய்கரிய ________________ தார்.

(1) செய்வதா
(2) செய்கலா
(3) செய்கை
(4) செய்வினை

( )

Q10 ________________ ஆயிரம் பொன் தரும்.

(1) ஒழுக்கம்
(2) அன்புடமை
(3) அடக்கம்
(4) ஆக்கம்

( )

Q11 ________________ செய விரும்பு.

(1) மறம்
(2) அறம்
(3) வரம்
(4) பரம்

( )

Q12 காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் ________________ பெரிது.

(1) மாணப்
(2) காணப்
(3) வானப்
(4) தானப்

( )

## B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

பாண்டியனும் வளவனும் பள்ளி நண்பர்கள். அவர்கள் இருவரும் ஒரே வகுப்பில் பயிலும் மாணவர்கள். அவர்கள் இணை பிரியாத நண்பர்களாக விளங்கினார்கள். **நட்பு** என்ற சொல்லுக்குச் சிறந்த உதாரணமாக அவர்கள் திகழ்ந்தார்கள். அவர்களுடைய நண்பர்கள் சிலர் அவர்களைக் கண்டு சில சமயம் பொறாமை கொண்டதும் உண்டு.

காலம் செல்லச் செல்ல அவர்களது நட்பும் வளர்ந்து வந்தது. ஆனாலும், அவர்களுடைய நடைமுறைகள் நாளடைவில் வேறு வேறு வகையாக அமைந்துவிட்டன.

பாண்டியன் நல்லொழுக்கமும் நன்னடத்தையும் உடையவனாக வளர்ந்து வந்தான். வளவனோ தீய ஒழுக்கமும் கெட்ட நடைமுறைகளும் மேற்கொண்டு வளர்ந்து வந்தான். நாளடைவில் வளவன் மீது பலவகையான குற்றச்சாட்டுகள் ஏற்பட்டன. அதன் காரணமாகத் தலைமை ஆசிரியர் அவனைப் பள்ளிக் கூடத்திலிருந்து **நீக்க** முடிவு செய்தார்.

பள்ளியிலிருந்து நீக்கப்பட்ட வளவன் மீது ஒரு களவுக் குற்றமும் வந்து சேர்ந்தது. காவலர்கள் அவனைக் கைது செய்தனர். அவன் மீது வழக்கு தொடரப்பட்டது. அவன் சிறையிலும் அடைக்கப்பட்டான்.

சிறையில் இருந்த வளவன் தன்னுடைய சூழ்நிலையை **எண்ணி** மிகவும் வருந்திக்கொண்டு இருந்தான். பாண்டியன் வளவனின் நெருங்கிய நண்பனாக இருந்தாலும் அவன் கல்வியில் சிறந்துத் தேறினான். அவன் கல்வியிலேயே தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தினான். பள்ளிப் படிப்பை முடித்தவுடன் கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றான். அதன் பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பயின்று, வழக்கறிஞராகத் தொழில் மேற்கொண்டான்.

வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்ட பாண்டியனின் புகழ், விரைவில் எங்கும் பரவியது. அவன் நாளடைவில் மேன்மையான நிலையை அடைந்தான்.

நல்லொழுக்கமுடையவர் வாழ்க்கையில் உயர்ந்து விளங்குவதும், தீயொழுக்கமுடையவர் வாழ்க்கையில் தாழ்வடைந்து வருந்துவதும் உண்மை என்பதை யாராலும் மறுக்க முடியாது.

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர் , OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. பாண்டியனும் வளவனும் எப்படிப்பட்டவர்கள்?

(1) அவர்கள் ஒரே இடத்தில் வசிப்பவர்கள்
(2) அவர்கள் நெருங்கிய தோழர்கள் ( )
(3) அவர்கள் ஒரே ஊரில் பிறந்தவர்கள்
(4) அவர்கள் சராசரி நண்பர்கள்

Q14. ஏன் பிறர் பாண்டியனையும் வளவனையும் கண்டு பொறாமை கொண்டனர்?

(1) அவர்கள் ஒரே வகுப்பில் பயின்றதால்
(2) அவர்கள் ஒரே பள்ளியில் பயின்றதால்
(3) அவர்கள் சிறந்த நட்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கியதால் ( )
(4) அவர்கள் புகழோடும் செல்வத்தோடும் வாழ்ந்து வந்ததால்

Q15. ஏன் வளவன் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டான்?

(1) அவன் தீய ஒழுக்கத்தை மேற்கொண்டதால்
(2) அவன் கெட்ட நடைமுறைகளைப் பின்பற்றியதால் ( )
(3) அவன் மீது பலவகையான குற்றச்சாட்டுகள் உண்டானதால்
(4) அவன் பள்ளிக்குக் கெட்ட பெயர் வாங்கித் தந்ததால்

Q16. ஏன் பாண்டியனின் புகழ் எங்கும் பரவியது?

(1) அவன் வழக்கறிஞர் தொழிலைச் செய்ததால்
(2) அவன் ஒழுக்கமுடையவனாக இருந்ததால் ( )
(3) அவன் சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்றதால்
(4) அவன் மேன்மையான நிலையை அடைந்ததால்

Q17. இக்கதை கூறும் கருத்து என்ன ?
(1) நல்லொழுக்கம் வருத்தத்திற்கு வழி வகுக்கும்.
(2) நல்லொழுக்கம் தாழ்வுக்கு வழி வகுக்கும். ( )
(3) தீயொழுக்கம் உயர்வுக்கு வழி வகுக்கும்
(4) நல்லொழுக்கம் உயர்வுக்கு வழி வகுக்கும்

B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர் , **OAS** விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

(6 மதிப்பெண்கள்)

*Q18.* நட்பு

(1) நண்பர்கள்
(2) உறவு
(3) அன்பு
(4) சிநேகிதம்

( )

*Q19.* நீக்க

(1) விடுவிக்க
(2) அகற்ற
(3) தண்டிக்க
(4) சிறையிட

( )

*Q20.* எண்ணி

(1) கணக்கிட்டு
(2) எதிர்த்து
(3) நினைத்து
(4) பார்த்து

( )

B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி.



பிரிக்லேண்ட் தொடக்கப்பள்ளி
பெருமையுடன் ஏற்பாடு செய்யும்



# கேளிக்கைச் சந்தை 2013

சிறப்பு விருந்தினர் :
திரு. மெய்யப்பன்,
பிரபல தொழிலதிபர்


நாள் : 21 மார்ச் 2013
(சனிக்கிழமை)
நேரம் : காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை

ஏராளமான உணவுப் பொருட்கள் மலிவான விலையில் கிடைக்கும்


ஊனமுற்ற சிறுவர்களுக்கு நன்கொடை வழங்கும் அங்கமும் உண்டு!

அனைத்து லாபமும் ஆதரவற்ற குழந்தைகள் இல்லத்திற்கு வழங்கப்படும்.

பல வகையான விளையாட்டுக்கள்! கவர்ச்சி மிகு பரிசுகள்!



சிறுவர்களுக்கான கராவோக்கே பாட்டுத் திறன் போட்டியும் உண்டு!



$10, $20 மற்றும் $50 பற்றுச்சீட்டுகளை நீங்கள் பள்ளி அலுவலகத்திலிருந்து வாங்கிக் கொள்ளலாம். $100 மதிப்புள்ள பற்றுச்சீட்டுகளை வாங்குவோருக்கு ஒரு குடை இலவசம்!

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.

(6 மதிப்பெண்கள்)

Q21. கேளிக்கைச் சந்தை 2013 எந்த நாளில் நடைபெறுகிறது ?

(1) வார நாளில்
(2) வார இறுதியில்
(3) பள்ளி விடுமுறை நாளில்
(4) பொது விடுமுறை நாளில்

( )

Q22. கேளிக்கைச் சந்தை மூலம் பெறப்படும் ஆதாயம் யாரைப் போய்ச் சேர்கிறது?

(1) பிரிக்லேண்ட் தொடக்கப்பள்ளி
(2) ஊனமுற்ற குழந்தைகள்
(3) ஆதரவற்ற குழந்தைகள்
(4) கராவோக்கே போட்டியில் பங்கு பெறும் சிறுவர்கள்

( )

Q23. எத்தனை வெள்ளி மதிப்புள்ள பற்றுச்சீட்டுகளை வாங்கினால் இலவசமாகக் குடை கிடைக்கும் ?

(1) $10
(2) $20
(3) $50
(4) $100

( )

## ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q.28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.

(24) சாலை ஓரமாக சென்ற மாட்டை, லாரி மோதியது. காயம் அடைந்த மாடு ______________ தாங்க முடியாமல் துடித்தது. ( )

(25) அன்று எனக்குப் பிறந்த நாள். அதனால் அம்மா எனக்குப் பிடித்தக் ______________ குழம்பை சமைத்தார் ( )

(26) கலைநிகழ்ச்சி தொடங்வதற்கு இன்னும் ______________ மணி நேரம்தான் இருந்தது. அதனால் நாங்கள் விரைவாக நிகழ்ச்சிக்குத் தயாரானோம் ( )

(27.) அப்பா நாய்க்குட்டிக்கு உணவு வாங்கி வந்தார். அதைப் பார்த்ததும் நாய்க்குட்டி ______________ கொண்டு வாலை ஆட்டியது ( )

(28) தேவி மல்லிகை பூ சூடினாள். மல்லிகைப் பூவின் ______________ வீடெங்கும் பரவியது. ( )

| | |
|---|---|
| (1) குரைத்து | (2) மணம் |
| (3) அறை | (4) வலி |
| (5) கோலி | (6) குறைத்து |
| (7) மனம் | (8) கோழி |
| (9) வழி | (10) அரை |

முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியில் 29 முதல் 35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

பாண்டிய நாட்டில் 'பிசிர்' என்ற ஊர் இருந்தது. ஆந்தையார்

என்னும் அறிஞர் வாழ்ந்து வந்தார். இவர் வாழ்ந்த காலத்தில்

சோழ நாட்டை கோப்பெருஞ் சோழன் என்னும் அரசன்

_____(29)____. இவரது நல்லாட்சியை கேள்விப்பட்ட 29. ( )

பிசிராந்தையார் இவர் மீது உள்ளார்ந்த நட்புக் கொண்டார்.

கோப்பெருஞ் சோழரும் பிசிராந்தையாரின் கல்விச் சிறப்பையும்

_____(30)____ பற்றி கேள்விப்பட்டிருக்கிறார். இருவரும் ஒருவரை 30. ( )

ஒருவர் காணாமலேயே நட்பு கொண்டிருந்தனர். கோப்பெருஞ் சோழரின்

மகன்கள் நாட்டை தந்தையிடம் இருந்து _____(31)_____ 31.( )

எண்ணினார்கள். அதனால் அவருக்குப் பல துன்பங்களைக்

கொடுத்தார்கள். இதனால் மனவருத்தம் அடைந்த அரசர்

_____(32)_____ தேடிச் சென்றார். 32. ( )

பிசிராந்தையார் 'தன்னையும் மற்ற புலவர்களைப் போல பரிசு

பெற வந்தவர் என்று தவறாக அரசர் நினைத்துவிடுவார் என்ற தயங்கினார்.

அதனால் அவர் அரசரைக் காணச் செல்லவில்லை. அரசரோ இறுதி

_____(33)_____ தனது நண்பர் பிசிராந்தையாருக்காக காத்திருந்தார். 33.( )

இறுதியில் தனக்கு பக்கத்தில் பிசிராந்தையாருக்காக ஒரு இடம்

கொடுக்கும்படி கூறியிருந்தார். நண்பரைக் காண வந்த பிசிராந்தையார் நடந்தவற்றைக் கேள்விப்பட்டு அவரும் _____*(34)*_____. 34.(      )

ஒருவருக்கு ஒருவர் நேரில் _____*(35)*_____ சிரித்து மகிழும் நட்பு 35.(      )

நட்பல்ல. உள்ளன்புடன் பழகுவதே நட்பாகும் என்னும் திருக்குறளின் கருத்துக்கு இவர்களே சிறந்த எடுத்துக்காட்டு.

| | | |
|---|---|---|
| 1. நற்குணங்களையும் | 5. புலவர் | 9. அறிஞர் |
| 2. வாய்விட்டு | 6. இறந்தார் | 10. ஆண்டான் |
| 3. கைப்பற்ற | 7. இறப்பை | 11. நல்லாட்சியை |
| 4. மூச்சுவரை | 8. வாழ்ந்தான் | 12. வாழ்ந்தார் |

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுது. (௨௦)

<u>கருத்தறிதல்</u>

ஓரூரில் குடியானவன் ஒருவன் இருந்தான். யார் எதைச் சொன்னாலும் அவன் நம்பிவிடுவான். அவனிடம் நான்கு கோவேறு கழுதைகள் இருந்தன. அவை நெல் மூட்டைகளைச் சுமந்து செல்லும்.

ஒருநாள் குடியானவன் தன் கழுதைகளை ஒரு மரத்தினடியில் கட்டிவிட்டு வயலில் வேலை செய்துகொண்டிருந்தான். அப்போது அப்பக்கமாக ஒரு திருடன் வந்தான். அவன் குடியானவனை ஏமாற்றிக் கழுதைகளில் ஒன்றைப் பிடித்துச் செல்ல எண்ணினான். அவன் கழுதையைப் பிடித்து மறைவான ஓரிடத்தில் கட்டிவைத்தான். பின்பு, அவன் தன் கழுத்தில் அந்தக் கழுதையின் கயிற்றைக் கட்டிக்கொண்டு அமர்ந்திருந்தான். வேலை முடிந்ததும் குடியானவன் வந்தான். அவன் கழுதை கட்டப்பட்டிருந்த கயிற்றில் ஒரு மனிதன் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு வியந்தான்.

குடியானவன் திருடனைப் பார்த்து, "நீ யார்? என் கழுதை எங்கே?" என்று கேட்டான். "ஐயா! நான்தான் உங்கள் கழுதை. நான் ஒரு முனிவரிடம் சீடனாக இருந்தேன். அப்போது நான் ஒரு பெருந்தவறு செய்துவிட்டேன். அவர் கோபங்கொண்டு இட்ட சாபத்தால் நான் கழுதையாக மாறியிருந்தேன். இப்போது அவர் கோபம் தணிந்துவிட்டது போலும். இவ்வளவு காலம் என்னை அன்பாக வளர்த்ததற்கு நன்றி," என்று திருடன் நயமாகக் கூறினான். அவன் சொன்னதை நம்பிய குடியானவன், "இனி முனிவருக்குக் கோபம் வரும்படி நடந்துகொள்ளாதே. உடனே அவரிடம் சென்று மன்னிப்புக் கேள்," என்று அறிவுரை கூறி அவனை விடுவித்தான். பின்னர், குடியானவனுக்குத் தெரியாமல் திருடன் கழுதையை ஓட்டிச் சென்று சந்தையில் விற்றான்.

ஒரு வாரம் கழித்துக் குடியானவன் ஒரு தெருவழியே நடந்து சென்றான். அப்போது தன்னுடைய பழைய கழுதை ஒரு வீட்டின் முன் கட்டப்பட்டிருப்பதைக் கண்டான். உடனே, அவன் கழுதையின் அருகில் சென்று அதன் காதில், "தம்பி, நான் சொன்னதைக் கேட்டு நடக்காமல் மீண்டும் கழுதையாகி விட்டாயே!" என்று பரிதாபத்துடன் கூறினான்.

கேள்விகள்

36. குடியானவன் எத்தகையவன்?(2)

37.அவன் கழுதைகளை எதற்காக வளர்த்தான்?(3)

38. குடியானவன் ஏன் ஆச்சரியப்பட்டான்?(3)

39.திருடன் ஏன் கழுதை உருவத்தில் இருந்ததாகக் கூறினான்?(4)

40.குடியானவன் கழுதையின் காதில் என்ன சொன்னான்?(4)

41.குடியானவன் ஏன் கழுதை உருவத்தில் இருந்த திருடனை விடுவித்தான்?(4)

# P5 SA2
# TESTPAPER 5

குளக்கரையில் இருந்த மரத்தில்...

1)1 2) 3 3) 1 4)3 5)1 6) 4 7) 4 8)3 9)2 10) 3 11)2 12) 1

13) 2 14) 3 15) 3 16) 1 17) 4 18) 4 19) 2 20) 3 21) 2 22) 3

23) 4 24) 4 25) 8 26) 10 27) 1 28) 2 29) 10 30) 1 31) 3 32) 7

33) 4 34) 6 35) 2

36) குடியானவன் யார் எதை சொன்னாலும் நம்பி விடும் குணமுடையவன்.

37)நெல் மூட்டைகளை சுமந்து செல்வதற்காக அவன் கழுதைகளை வளர்த்தான்.

38)குடியானவன் கழுதை கட்டப்பட்டிருந்த கயிற்றில் ஒரு மனிதன் கட்டப்பட்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான்.

39)திருடன் தான் முனிவரிடம் சீடனாக இருந்த போது ஒரு பெருந்தவறு செய்ததாகக் கூறினான்.அதனால் அவர் கோபம் கொண்டு இட்ட சாபத்தால் தான் கழுதை உருவத்தில் இருந்ததாகக் கூறினான்.

40) குடியானவன் கழுதையின் காதில் தான் கூறியதைக் கேட்டு நடந்து கொள்ளாமல் இருந்ததால் மீண்டும் கழுதையாகி விட்டாயே என்று சொன்னான்.

41) திருடன் கூறியதை நம்பிய குடியானவன் அவனை இனி முனிவருக்குக் கோபம் வரும்படி நடந்து கொள்ள வேண்டாம் என்று கூறி அவரிடம் சென்று மன்னிப்பு கேட்பதற்காக கழுதை உருவத்தில் இருந்த திருடனை விடுவித்தான்.